II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT TIRUVALLUR AT POONAMALLEE

## 2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் @ பூந்தமல்லி

முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி

2025ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 17 ஆம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.2/2025 ன் அசல் வழக்கு எண்.337/2023**

திருமதி. மஞ்சுளா, வயது 44, க/பெ திரு. கோபால், த/பெ திரு. கே. பாண்டுரங்கன், வசிப்பிட முகவரி எண்.5, திரு.வி.க. தெரு, பாண்டியன் அரிசி ஆலைக்கு எதிரில், ஆவடி, சென்னை – 600 054.

...மனுதாரர்/வாதி

..எதிர்..

1. திரு. கே. பாண்டுரங்கன், வயது 77, த/பெ கோதண்ட நாயக்கர்
2. திருமதி. பி. கலாவதி, வயது 64, க/பெ திரு. கே. பாண்டுரங்கன்,
3. திரு. பி. தினேஷ் பாபு, வயது 46, த/பெ திரு. கே. பாண்டுரங்கன்,
4. திரு. பி. ரூபன் பாபு, வயது 37, த/பெ திரு. கே. பாண்டுரங்கன்,

1 முதல் 4 எதிர்மனுதாரர்களின் வசிப்பிட முகவரி பெருமாள் கோவில் தெரு, இருளப்பாளையம் கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் – 602 107

... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனு மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் விதி 28(2) மற்றும் பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கின்

விசாரணை தேதியை 24.07.2025 ல் இருந்து இன்றைய தேதிக்கோ அல்லது அதற்கு முந்தைய தேதிக்கோ முன்னெடுக்க அனுமதித்து உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு 09.07.2025 அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது மற்றும் மனுவில் ஒட்டிய நீதிமன்ற கட்டண முத்திரை ரூ.20/– ஆகும்.

இந்த மனுவானது 15.07.2025 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. எம்.வி. சேஷாச்சாரி மற்றும் சி. ஹரினி ஆகியோர் ஆஜராகியும், 1, 2 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. எஸ்.கே. ஸ்வாமி, எம். யுவராஜ், எம். விஜயகுமார், அருணா மற்றும் கோகுல்ராம் ஆகியோர் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.எஸ். மனோகரன், எம். சுதாகர் மற்றும் என். ராஜேஷ் ஆகியோர் ஆஜராகியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் அடிப்படையில் முறைப்படி விடுக்கப்படும்

**<u>தீர்ப்பாணை கட்டளை</u>**

1) மனு அனுமதிக்கப்பட்டது. அசல் வழக்கின் கேட்புத் தேதியை 24.07.2025 ல் இருந்து 18.07.2025 க்கு முன்னெடுத்து உத்தரவிடப்பட்டது.

2) செலவுத்தொகை இல்லை.

**<u>செலவுத்தொகை பட்டியல்</u>**

| மனுதாரரின் செலவுத்தொகை | | எதிர்மனுதாரரின் செலவுத்தொகை | |
|---|---|---|---|
| மனுவில் ஒட்டிய முத்திரை | 20.00 | வக்காலத்தில் ஒட்டிய முத்திரை | -- |
| வக்காலத்தில் ஒட்டிய முத்திரை (செலவுக் குறிப்பேடு சமர்ப்பிக்கப்படாததால், பிற செலவுகள் சான்றளிக்கப்படவில்லை) | -- | (செலவுக் குறிப்பேடு சமர்ப்பிக்கப்படாததால், பிற செலவுகள் சான்றளிக்கப்படவில்லை) | -- |
| | 20.00 | | -- |

2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 17 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருவள்ளூர் @ பூந்தமல்லி

<u>தீர்ப்பாணை கட்டளை</u>
இ.ம.எண்.2/2025 ன்
அசல் வழக்கு எண்.337/2023
நாள் 17.07.2025
2 வது சகூ.மா.அ.நீ., பூந்தமல்லி.